## காஞ்சிபுரத்தில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## இன்று – தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது!

### தீ பரவட்டும்!

**செந்தமிழைக் காக்க சேனை ஒன்று தேவை!**

*செந்தமிழைக் காப்பதற்குச்*
*சேனை ஒன்று தேவை - பெருஞ்*
*சேனை ஒன்று தேவை.*
*திரள்திரளாய்ச் சேர்ந்திடுவீர்*
*புரிவம் நல்ல சேவை.*

*இந்திதனைத் தமிழரிடம்*
*ஏன் புகுத்த வேண்டும்? - இவர்*
*ஏன் புகுத்த வேண்டும்?*
*எம்முயிரில் நஞ்சுதனை*
*ஏன்கலக்க வேண்டும்?*

*பைந்தமிழை மாய்ப்பதற்கே*
*பகைமுளைத்த திங்கே! - கொடும்*
*பகைமுளைத்த திங்கே!*
*பாதகரை விட்டுவைத்தால்*
*தமிழர்திறம் எங்கே?*

*சந்தத்தமிழ் மொழியிழந்தால்*
*தமிழர் நிலை தளரும் - நல்ல*
*தமிழர் நிலை தளரும்*
*தமிழர்திறம் காட்டிடுவோம்*
*முழங்கிடுவீர் முரசம்!*

— பாவேந்தர் பாரதிதாசன்

**இந்தி ஆதிக்கத்தை வேரறுக்க எழுந்த மொழிப்போர்த் தியாகிகள் தின வீர முழக்கம்!**

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நமக்குக் கற்பித்துச் சென்ற ஐம்பெரும் கொள்கை முழக்கங்களில் முதன்மையானது, "இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!" என்ற முழக்கம் நம் உயிரில் கலந்தது. உணர்வில் பதிந்தது.*

*1930-களிலும் 1965-லும் இந்தியின் ஆதிக்க அலைக்கு எதிராகத் தமிழ்நாட்டைத் தற்காத்தது திராவிட இயக்கம். தந்தை பெரியார் ஊட்டிய இனஉணர்வும் பேரறிஞர் அண்ணா நமக்களித்த "இருமொழிக் கொள்கை" எனும்*




*எஃகு அரணும், 'தாழப் பறக்காது எங்கள் தமிழ்க்கொடி' என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், உயர்த்திப் பிடித்த கொள்கை முன்னெடுப்புகளும் டெல்லி அதிகார மையங்களின் நகங்கள்கூட தமிழ்நாட்டைத் தொட்டுப் பார்க்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது.*

*பேரறிஞர் அண்ணா தந்த இருமொழிக் கொள்கையால் இன்று தமிழ்நாடு அடைந்திருக்கும் உயரம் உலகறிந்தது. 'தமிழருக்கு அவர் தாய்மொழி; உலகத்தோடு உறவாட ஆங்கிலம்' என நம்முடைய இரு மொழிக் கொள்கையால் இந்திய மாநிலங்களுக்கே வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு.*

*நம்முடைய புறநானூற்றுப் படைத் தலைமைகளின் வழித் தோன்றலாக, வரலாற்றின் தொடர்ச்சியாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தித் திணிப்பு எனும் கோரைப் பற்களுக்கு எதிராக*







*மாநில மொழியுரிமை வாளையும், தமிழின் தொன்மை மரபை உலகுக்கு உணர்த்தும் கீழடிக் கேடயத்தையும் ஏந்தி நிற்கிறார்.*

*இந்தியைக் கொண்டு வந்து நம்மிடம் வாலாட்டத் துடிக்கும் சங்கிகளுக்கும் சர்வாதிகாரிகளுக்கும் நம்முடைய இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் அவர்கள் சிம்ம சொப்பனமாக விளங்குகிறார்.*

*எரிநெருப்பும் சிந்திய ரத்தமும் அதில் கலந்த மொழிப்போர் வீரர்களின் தியாகமும் நமக்கு உணர்த்தும் வரலாற்றுச் செய்தி ஒன்றுதான்: "உரிமைப் போரில் உறங்குபவனுக்கு வாழ்வு கிடையாது!"*

*வரும் ஜனவரி 25-ம் தேதியன்று, மொழிப்போர்த் தியாகிகள் தினத்தில் நாம் எடுக்கும் உறுதிமொழி, நமக்குச் சடங்கான செயல் அல்ல. அது ஆதிக்கவாதிகளின் செவிகளுக்கு அண்ணா, கலைஞர், கழகத் தலைவர் வழியில் நாம் விடுக்கும் அறைகூவல்!.*

- **இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
- **எங்கள் மொழி, எங்கள் அடையாளம்!**
- **கீழடி தமிழர் தாய்மடி.**
- **தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்**
- **தமிழ்நாட்டைத் தலை குனிய விட மாட்டேன்.**
- **தமிழ் வாழ்க!**

*தியாகிகள் சிந்திய குருதி காய்ந்திருக்கலாம்; ஆனால் அவர்கள் பற்றவைத்த உணர்வுத் தீ என்றும் அணையாது. நம் வருங்காலத் தலைமுறைகளின் எதிர்காலத்திற்காக, நம் பண்பாட்டு அடையாளங்களைக் காப்பதற்காக, மண், மானம், மொழி, இன உரிமைகளை மீட்பதற்காக, மீண்டும் ஒரு சேனை தேவை! அந்தச் சேனை, கொள்கை வீரர்களாகிய கழக மாணவர் படையே என்ற உரத்த சிந்தனையுடன் களம் காண்போம்!*

### தீ பரவட்டும்!

### கழகத் தலைவர் தலைமையில்

### இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

***அன்னைத் தமிழை உயிரினும் மேலாக காப்போம்!***

***வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!***

***தமிழுக்கும் அமுதென்று பேர் -***
***அந்தத் தமிழ் இன்பத்***
***தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!***

## உரையாற்றுவோர் பட்டியல்

**காஞ்சிபுரம்** - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் **தலைவர்** அவர்கள்
க.சுந்தர், எம்.எல்.ஏ.,

**சைதாப்பேட்டை** - பொதுச்செயலாளர் மாண்புமிகு **துரைமுருகன்**
எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி.,
மாண்புமிகு மா.சுப்பிரமணியன்,
நே. சிற்றரசு
மயிலை த.வேலு

**தாம்பரம்** - பொருளாளர் **டி.ஆர்.பாலு,** எம்.பி.,
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
எஸ்.ஆர். இராஜா, எம்.எல்.ஏ.,
நெய்வேலி இரா.தமிழரசன்
நா. அருண்

**திருச்சி** - முதன்மைச் செயலாளர் மாண்புமிகு கே.என். நேரு
வி.பி. கலைராஜன்,
க. வைரமணி
பி.எம். ஆனந்த்
அ. அருண்குமார்

**திண்டுக்கல்** - மாண்புமிகு ஐ. பெரியசாமி
தமிழன் பிரசன்னா
ஐ.பி. செந்தில்குமார், எம்.எல்.ஏ.,
வா. ராஜேஸ்வரி

**திருக்கோவிலூர்** - முனைவர் க. பொன்முடி
டாக்டர் பொன்.கௌதமசிகாமணி
முரசொலி மூர்த்தி
த.இன்பக்குமரன்

**புதுக்கோட்டை** - கனிமொழி கருணாநிதி, எம்.பி.,
குத்தாலம் அன்பழகன்
கே.கே.செல்லபாண்டியன்
துரை. தமிழ்ச்செல்வன்
சா. சஸ் ரீனா பிர்தவுஸ்

**உடுமலைப்பேட்டை** - திருச்சி என். சிவா, எம்.பி.,
கே.ஈஸ்வரசாமி, எம்.பி.,
கவி கணேசன்
க.ர. பிரார்த்தனா

**பட்டுக்கோட்டை** - ஆ. இராசா, எம்.பி.,
டி. பழனிவேல்
குடியாத்தம் த.புவியரசி
இரா.செ. கபில்சாய்

**தாராபுரம்** - அந்தியூர் ப. செல்வராஜ், எம்.பி.,
மாண்புமிகு கயல்விழி செல்வராஜ்
பொள்ளாச்சி சித்திக்
இல. பத்மநாபன்
திருப்பூர் மகிழவன்

**அவினாசி** - மாண்புமிகு மு.பெ.சாமிநாதன்
கரூர் முரளி
மேயர் என். தினேஷ்குமார்
திருமதி நாகநந்தினி
தி.ஈ. திருமேனி

**திருவொற்றியூர்** - மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
**உதயநிதி ஸ்டாலின்**
மாதவரம் எஸ்.சுதர்சனம், எம்.எல்.ஏ.,
மாண்புமிகு பி.கே. சேகர்பாபு
ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ.,
அ.தா. டெக்சின் ரொமேரியா

**கரூர்** - ஆர்.எஸ். பாரதி
வி. செந்தில்பாலாஜி, எம்.எல்.ஏ.,
டான் அசோக், தி. பிரபு

**சிங்காநல்லூர்** - இரா. ராஜீவ்காந்தி
துரை. செந்தமிழ்ச்செல்வன்
வி.ஜி. கோகுல்
சி.கா. சுகன் மந்த்ரன்

**விருதுநகர்** - மாண்புமிகு எ.வ. வேலு
மாண்புமிகு தங்கம் தென்னரசு
தூத்துக்குடி சரத்பாலா
மு. இராமச்சந்திரன்

**திருவண்ணாமலை** - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி.,
கவிஞர் நன்மாறன்
பெனாசீர்
அ. தமிழரசி

**ஜோலார்பேட்டை** - டி.கே.எஸ். இளங்கோவன்
ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,
க. தேவராஜி
எஸ்.கே. ஸ்ரீராம்
வி. வேல்முருகன்

**பூவிருந்தவல்லி** - கவிஞர் மனுஷ்யபுத்திரன்
மாண்புமிகு சா.மு. நாசர்
தாம்பரம் ஜின்னா
ஆஷிகா பர்வின்

**சிதம்பரம்** - மாண்புமிகு எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
எம்.எம்.அப்துல்லா
பிரம்மபுரம் பழனி
தே. சிலம்பரசன்
அஷ்வின் (எ) தாயுமானவன்

**பெருந்துறை** - கடலூர் இள. புகழேந்தி
தோப்பு வெங்கடாசலம்
வரகூர் காமராஜ்
தாரை சிவா
செ. நந்தகோபால்

**அறந்தாங்கி** - பொன். முத்துராமலிங்கம்
மாண்புமிகு எஸ்.ரகுபதி
மாண்புமிகு சிவ.வீ.மெய்யநாதன்
சு. சுகநிலவன்

**போளூர்** - மாண்புமிகு கு. பிச்சாண்டி
எம்.எஸ். தரணிவேந்தன், எம்.பி.,
டாக்டர் சையத் ஹபீஸ்
தா. ஜெயபாரதி

**சீர்காழி** - எஸ்.எஸ். பழனிமாணிக்கம்
திருமதி விஜயா தாயன்பன்
நிவேதா எம்.முருகன், எம்.எல்.ஏ.,
ம.க. சூர்யா

**கும்பகோணம்** - மாண்புமிகு முனைவர் கோவி. செழியன்
எஸ்.கல்யாணசுந்தரம், எம்.பி.,
சாக்கோட்டை அன்பழகன்
ஜோ.வியானி விஷ்வா

**பொள்ளாச்சி** - சுப. வீரபாண்டியன்
நடிகர் எம்.ஆர்.ஆர்.வாசு விக்ரம்
தளபதி முருகேசன்
பி. கவிஸ்ரீ

**கள்ளக்குறிச்சி** - குத்தாலம் பி. கல்யாணம்
வசந்தம் க.கார்த்திகேயன், எம்.எல்.ஏ.,
டாக்டர் வி.எஸ்.விஜய்
ச. ஷாநவாஸ்

**ராஜபாளையம்** - மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.
ராமச்சந்திரன்
கம்பம் செல்வேந்திரன்
திருமதி விஜிலா சத்யானந்த்
திருச்செல்வன்

**திண்டிவனம்** - கவிஞர் தமிழ்தாசன்
செஞ்சி கே.எஸ்.மஸ்தான், எம்.எல்.ஏ.,
இறையன்பன் குத்தூஸ்
ச. கீர்த்தனா

**வாசுதேவநல்லூர்** - முனைவர் சபாபதிமோகன்
ஈ. ராஜா, எம்.எல்.ஏ.,
நெல்லை முத்தையா
கு. விஜயகுமார்

**வேலூர்** - திண்டுக்கல் ஐ.லியோனி
ஏ.பி.நந்தகுமார், எம்.எல்.ஏ.,
பார். இளங்கோவன்
சேப்பாக்கம் பிரபாகரன்
ஜா.முஹம்மத் ஜபீர்

**கம்பம்** - ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ.,
கம்பம் நா.இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ.,
டாக்டர் கலைக்கதிரவன்
ச. வர்ஷினி

**திருப்பூர்** - கவிச்சுடர் கவிதைப்பித்தன்
திருப்பூர் க. செல்வராஜ், எம்.எல்.ஏ.,
கம்பம் இரா.பாண்டியன்
ச. நாகராஜ்

தொடர்ச்சி 4- ஆம் பக்கம்